# <u>சிறப்பு சார்பு நீதிமன்றம், (மோட்டார் வாகன விபத்து இழப்பீடு தீர்ப்பாயம்)</u>
# <u>திருப்பத்தூர், திருப்பத்தூர் மாவட்டம்</u>
# <u>MCOP .No. 150/2021</u>

**<u>நாள் : 04.11.2025</u>**

**எ.ம.சா.** 1 (எதிர்மனுதாரர் தரப்பில்) வது நபரின் வாக்குமூலம் (1959)-ம் ஆண்டின் 54 வது விதியின் 9-வது பிரிவின் ஏற்பாட்டின் படி ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.தேவன் | மாவட்டம் | : | திருப்பத்தூர் |
| தந்தை பெயர் | : | திரு.ராஜா | வயது | : | 41 |
| ஊர் | : | கல்லேத்திப்பட்டி | தொழில் | : | லாரி டிரைவர் |
| வட்டம் | : | திருப்பத்தூர் | தேசியம் | : | இந்தியன் |

**<u>முதல் விசாரணை</u>**

நான் இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட லாரியை ஓட்டிச்சென்ற ஓட்டுநர் ஆவேன். 08.02.2021ஆம் தேதி TN 48 K 7376 என்ற லாரியை திருப்பத்தூரிலிருந்து தர்மபுரி நோக்கி ஓட்டிச் சென்றேன். நான் தர்மபுரி நோக்கி திரும்பும்போது ஹவுசிங்போர்டு கூட்ரோடு அருகே நான் சிக்னல் போட்டு கை காட்டி திரும்பும்போது விபத்து நடந்தது. அதாவது எனக்கு பின்னால் ஸ்கூட்டியில் வந்த இரண்டு நபர்கள் எனது வாகனத்தின் பின்சக்கரத்தில் மோதிவிட்டார்கள். விபத்திற்கு முக்கிய காரணமே இருசக்கர வாகனத்தை ஓட்டிவந்த ஓட்டுநர்தான். என்னை விபத்து சம்பந்தமாக போலீசார் விசாரித்தார்கள். நான் ஓட்டிச் சென்ற எனக்கு சொந்தமான லாரியை மோட்டார் வாகன ஆய்வுக்கும் அனுப்பிவைத்தார்கள். விபத்து சம்பந்தமாக தற்போது அளித்த சாட்சியத்தைத்தான் போலீசார் விசாரித்தபோதும் கூறினேன் மனுவில் சொல்லப்பட்டதுபோல் விபத்தானது நடக்கவில்லை. நான் வாகனத்தை அதிவேகமாக ஓட்டிச்சென்று முன்னால் சென்ற மனுதாரரின் இருசக்கர வாகனத்தின்மீது மோதி விபத்து ஏற்படுத்தியதாக சொல்வது உண்மைக்கு புறம்பானது.

இதுநாள் வரை எந்த ஒரு நீதிமன்றத்திலும் அபராதம் எதுவும் செலுத்தியதில்லை. விபத்து சம்பந்தமாக பதிவு செய்யப்பட்ட குற்றவழக்கு சம்பந்தமாக குற்றவியல் நீதிமன்றத்திலிருந்து நாளது தேதிவரை எந்த சம்மனும் எனக்கு வரவில்லை. சாட்சி தனது அசல் ஆதார் அடையாள அட்டை மற்றும் அசல் ஓட்டுநர் உரிமத்தை முன்னிலைப்படுத்துகிறார். எ.ம.சா.1ன் ஆதார் அடையாள அட்டை எ.ம.சா.ஆ.1., எ.ம.சா.1ன் ஓட்டுநர் உரிமம் எ.ம.சா.ஆ.2.

ஒம்/. J. நாகலட்சுமி @ விஜயராணி,
சிறப்பு சார்பு நீதிபதி (MACT),
திருப்பத்தூர்.